உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பதினோராந்தொகுதி

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1912-1913.

"செந்தமிழ்"ப் பதினோராந்தொகுதியின்

உள்ளுறை.

அநுதாபக்குறிப்பு:-பத்திராதிபர்.(பகுதி-௧௨ ல் அநுபந்தம்பக்கம் ௨.)

ஆந்தகக்கவிவீரராகவ முதலியார்காலம்:— ஸ்ரீமத் - வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள், [M.R. A.S. ௧௪௮, ௨௧௮, ௩௭௬.

அறமும் அறவுரிமையும்:—,,இலக்குமணப்போற்றிகள். ௨௭௦, ௩௧௩.

ஆக்கச்சொல்விளக்கம்:—,,நா. சோமசுந்தரம்பிள்ளையவர்கள். ௩௬௯.

ஆழ்வார்திருநகரிச் சாசனங்கள். ,,A. M. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள். [௨௬௪, ௩௪௨, ௩௪௪, ௩௮௪.

இந்தியபசுபரிபாலனசங்கம்:—A.B. LAL Esq. F.R. H.S. ௨௦௫.

இயைபுத்தொடைமுடிவுரை:—பத்திராதிபர். ௮௧.

ஐயவினாத்தொடர்:—நச்சுவார்க்கினியன். ௨௯.

ஐயவினாத்தொடர்விடை:-ஸ்ரீமத்-அ.முத்தையமுதலியாரவர்கள். ௭௩.

ஐயவினாவின் விடையுரையாராய்ச்சி:— ,, அ. முத்தையமுதலியாரவர்கள். ௧௫௫.

ஐயவினாவின் விடையுரையாராய்ச்சியின்எதிருரை:- பத்திராதிபர். ௧௫௯.

ஐயவினாவுக்குவிடை:-ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௭௭.

ஔவையாரது நீதிநூல்கள்:— ,,டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரிகள். [௧௦, ௪௫.

கையறுநிலை:— ,, வி. எஸ். அரங்கஸாமி ஐயங்காரவர்கள். (பகுதி-[௧௨ ல் அநுபந்தம். பக். ௧.)

செந்தமிழ்விரும்பும் விஷயதானங்கள்:—பத்திராதிபர். ௨௩௭.

தமிழகராதிசபை:— (யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கம்.) ஸ்ரீமத் - அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். [௧௯௯.

தமிழகராதிவேலையின் விவரம்:— ரெவரெண்டு J. S. சாண்டிலர்துரையவர்கள். [௧௨௨.

தமிழும் ஸம்ஸ்கிருதவுதவியும்:— ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸாமிஐயரவர்கள் [B.A.,B.L. ௨௫௫, ௩௦௧, ௩௨௫, ௩௫௭.

தமிழ்நாட்டுக்குடிகள் பரதேசத்திற் படும்பாடுகள்:— ,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை[யவர்கள். ௩௧௦.

தமிழ்மொழியும் சிவநெறியும்:—ஒரு சைவன். ௯௧.

தனித்தமிழ் ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:— } மதுரைத் தமிழ்ச் சங்கம் பிரஸிடெண்டவர்கள். } கசாஅ, கசாகூ.

திருக்குறட்பொருண்மயக்கம்:— } ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். [ஙசசா.

திருமந்திரம்:—,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ககக.

திருவள்ளுவர் தொடை நடைவிளக்கம்:— } நச்சினார்க்கினியன். உஅஉ.

"துனியும் புலவியும்" என்னுங் குறள் ஆராய்ச்சி:— } ஸ்ரீமத் - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். [சகஅ.

நம்பியகப்பொருண் முகவுரை:—பத்திராதிபர். (பகு. உ. அரு-பக். 1.)

நாலடியார் கடவுள் வாழ்த்துரை:— } ஸ்ரீமத் - அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். [ஙஙங.

பக்திவைபவம்:—,, வி.தி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். சாஎ, கஙசா.

பசுபரிபாலனசங்கமும் அதன்பயனும்:—பத்திராதிபர். உகங.

பண்ணையாட்களை வேலையிற் பழக்குதல்:— } D. T. சாட்விக் Esq. ஙகூ0.

பதிபசுபாசத்தொகை:—பத்திராதிபர். உச0.

பத்திராதிபர்குறிப்பு:— சஉ0.

பயிர்களுக்கு நஷ்டத்தை யுண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றி:— } டி. பெயின்பிரிக்கிப்ளெச்சர் துரையவர்கள். } கசங.

பரிசோதனத்தொடர்:—பத்திராதிபர். க, ககங, களங, உஎஎ, ஙகஎ.

பரிசோதனத்தொடர்:-ஸ்ரீமத்-அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள். உசங.

பாட்டியல்:— ,, அ. முத்தையமுதலியாரவர்கள். உரு.

பாண்டித்துரைத்தேவர் தமிழ்ப்புத்தகசாலை:— } தமிழ்விருப்பன். ஙசகூ.

பாண்டியசாசனம்:— } ஸ்ரீமத் - A. M. சடகோபராமாநுஜாசாரியர் [அவர்கள். ஙஉ, ருசா.

பாண்டியநாட்டுச்சாசனங்கள்:—நச்சினார்க்கினியன். சஉக.

பிழைதிருத்தம்:—பத்திராதிபர். உ0ச, ஙருசா.

புட்பபந்தம்:-ஸ்ரீமத்-ப.அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளையவர்கள். கஅ, சகூ.

புத்தகவரவு:—பத்திராதிபர். ஙசா, எக, ககஉ, களஉ, உளரு

பொருளதிகாரஆராய்ச்சி:— (தொல்காப்பியம்) } ஸ்ரீமத்-வே. முத்துஸாமி ஐயரவர்கள், M. A., L. T. உஉச, உசள, உகூக, ஙஙரு, ஙசாஉ, ஙகூங,

மதிப்புரை:—பத்திராதிபர். ஙடுஉ, சஉங.
மநுநீதிகண்டசோழர்காலம்:— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள். அ.
மழவராயன்சாசனம்:— ,, A. M. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள். உஙஉ.
மாறனலங்கார வரலாறு:— ,, A. M. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள். சO௨.
முகவுரைப்பெயர்கள்:—,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். கசுஎ.
ராஜபக்தி:—,, கா. கோபாலாசாரியர் அவர்கள். கஎஅ.
வண்ணமும் சந்தமும்:—இயலாளி. ஙஅஉ.
வானசாஸ்திரம்:— ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர் அவர்கள். ருஅ, கஉச, ககூரு.
விதையெடுத்தலும் விதையடித்தலும்:—எப். வேர் Esq. ஙஅஅ.
வினைப்பகுதிவேறுபடுகை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள். சக, ககஎ.
வினைப்பகுபதவிளக்கம்:—பத்திராதிபர். கசரு.
வெள்ளூர்ச்சாசனங்கள்:—ஸ்ரீமத்-A. M. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள். கOசு, கஙங.
வேள்பேகன்:—,, மு. இராகவையங்காரவர்கள். ஙஎ.

"செந்தமிழ்"ப் பதினோராந்தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

[முற்றுப்பெற்றது.]

1. திருமந்திரநூறுபாட்டுக் குரை:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். ச, ரு பகுதிகள்,

---

(முற்றுப்பெறாதது.)

1. மாறனலங்காரம்:—பத்திராதிபர். க, உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ, கO, கக, கஉ பகுதிகள்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கக.] பரீதாபி ஸு கார்த்திகைமீ [பகுதி-க.

பரிசோதனத்தொடர்.

தமிழ்மொழி வளர்ச்சிக் கின்றியமையாத பலவகை நயமு மமைந்த பெருமைவாய்ந்து பழையவும் புதியவும் சிறியவும் பெரியவுமாயுள்ள தமிழ்நூல்கள் பல. அவற்றுள் ஒருசில உரையெழுதப்பட்டனவும் பலபல உரையெழுதப் படாதனவுமாகி யேட்டி லெழுதிவைத்துப் போற்றப்பட்டு வந்தனவாயினும் அவை பெரும்பாலும் கற்றோரா னெழுதப்படாமையாலும், மெய் நெடில் முதலிய வெழுத்துவேறுபாடுதோன்றப் புள்ளி முதலிய கொடுத் தெழுதப்பெறாமையாலும், எழுதுவோர் தவறுதலாலும், சிதைந்த விடங்களில் அவரவர்க்குத் தோன்றியவாறு சேர்த்தெழுதுவதாலும், படிப்போர் பொருள் தோன்றாது மயங்கியவழித் தமக்குத் தோன்றும் பொருளுக்கேற்பத் திருத்துதலாலும் பலவாறு பரம்பரையே பிழைபட்டிருக்கின்றன.

அப்பிழை முற்காலத்தே மூலபாடங்களிற்றோன்றியன சிலவுள. அவற்றைச் சுத்தபாடமாகக்கொண்டு பின்புள்ளார் உரையெழுதி வைத்தனவுஞ் சிலவுள. உரையிடைப்பொருள் விளக்கவேண்டிப் பின்வந்தா ரிடைச்செருகிய வுரைவாக்கியங்களும்பல. அவற்றுட் பிழைபடுவனவுஞ் சில.

இங்ஙனம் உருவழிந்துகிடந்த தமிழ் நூல்களை யுருக்குலையாது பாதுகாக்கக் கருதிய லோகோபகாரசீலரான பண்டிதர்களால் அவை

பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப்பெற்றனவும் பெறுகின்றனவும் பெறவேண்டுவனவுமாகியுள்ளன.

பரிசோதனம் மிகவும் அரிதென்பதும் அது பலவகை யிடர்ப்பாடுடையதென்பதும் அதிலும் பாக்கிஞெலோரோவழித் தவறுதல்கூடுமென்பதும் அறிஞர்கள் அறிந்தனவாம். அங்ஙனம் காணும் ஓரோர் தவறுகொண்டு பதிப்பித்தவர்க்கு ஒருவர் ஒரு குறைகூறத் துணிவது அவரது செய்ந்நன்றிகோறலின் வேறன்று. ஆதலால் அந்நூல்களை யெழுதினோர்க்காயினும் உரைசெய்தோர்க்காயினும் பதிப்பித்தோர்க்காயினும் ஒரு குறைவுகூறக்கருதாது அவர்களிடத்து நன்றியறிதலுடையாராகவே யந்நூல்களைப் பரிசிலநம்பண்ணும் பண்டிதர்களாற் சிறந்த பாடபேதங்களாயினும் திருத்தங்களாயினும் ஓரோவழிக்கண்டால் அவற்றைப் 'பரிசோதனத்தோடர்' எனப் பெயர் கொடுத்துச் செந்தமிழ்வாயிலாக வெளியிட்டுவருவாராயின் அச்சிட்ட கம்பராமாயண முதலிய பல நூல்களும் எளிதிற் திருத்தப்பட்டுச் சுத்தபாடமாகி இன்னும் சிறப்படையுமென்ப தொருதலை.

இத்தகைய் திருத்தங்கள் முன்பு செந்தமிழில் வெளிவந்தன சிலவுண்டு. அவை அந்நூல்களைப் படிப்பவர்க்கும் பதிப்பிப்பவர்க்கும் மிகப் பயன்பட்டிருக்கின்றன. அவ்வாறு இன்னும் பதிப்பித்தநூல்களிற் காணப்படும் திருத்தங்கள் பலவும் தொடர்ந்து செந்தமிழ் வாயிலாக வெளியிடப்பெறின் மிகப் பயன்படுமென்று ஒரு பெரியாரும் பணித்திருக்கின்றனர்.

பாம்பரையே பலவேறு வகைப்பட்ட பாடபேத முதலியவற்றிற்குச் சில வுதாரணம் பின் வருவனவுற்றுட் காண்க.

சென்ற மாதச் செந்தமிழில் சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்க ளெழுதிவிடுத்த "வினைப்பகுதிவேறுபடுகை." என்னும் அரிய செப்புரையில் "பைவரல்=மெலிதல், துயருறல். 'பைவாராவருங்கானி' லென்று வில்லிபுத்தூரர் கூறுவர்." என்று உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. இது வில்லிபுத்தூரர் பாரதத்தில் "செய்வராவினமுகளு" மென்னுஞ் செய்யுளில் உள்ளது.

(கிருட்டிணன்றூதுச் சருக்கம். செ— 5) அச் செய்யுள், அச்சுப் பிரதியில்

"செய்வாரினமுகளுந்திருநாடுபெறநினேவோசென்றுமீளப்
பையராவருங்கானிற்படர்ந்துதிரிதரநினேவோபகைத்தபோரி
லுய்வாரெனவிரைவினுருத்தெழுந்துபொரநினேவோவுண்மையாக
வைவராமவனிபர்க்குநினேவேதென்றருள்புரிந்தானமரர்கோமான்.

எனப் பதிப்பிக்கப்பட்டு அதற்கேற்பப் பொருளு மெழுதப்பட்டிருக் கிறது. மற்ஒரு பிரதியில் "பைவராயருங்கானி" லெனப்பதிப்பிக் கப்பட்டிருக்கிறது. பழைய சில ஏட்டுப்பிரதிகளிற் "பைவராவிருங் கானிற் படர்ந்து" என்றெழுதப்பட்டிருக்கிறது. இவற்றுள் எதுகை நயமும் பொருட்சிறப்பும் நோக்கப் பைவராவென்பதும் படர்ந்து திரிதரவென்பதற்கேற்ப இருங்கானில் என்பதும் சிறந்த பாடங்களா கக் காணப்படுகின்றன. பைவராயருங்கானில் என்ற பதிப்புக்குப் பொருளின்மையால் பைவராவருங்காமனன்ற பாடமே வகரம் விழ வேண்டுமிடத்து யகரம் விழுந்த அச்சுப்பிழையென்று கருதக் கிடக்கின்றது. பையராவருங்கானமென்ற பாடமும், பைவராவருங் கானமென்பதனையே ஏட்டிற் சிதைவுபற்றியவிடத்தில் யகர வகரங் களுக்கு வேறுபாடு தோன்றாத வழி எதுகை நோக்கிய பைவரா வென்னு மருஞ்சொற் பொருள் தோன்றுதொழியக் கானுக்கேற்ற அடையாகிய பையராவென்பது பொருந்துமெனக் கருதியோ ரெழுதி வைத்த பாடபேதம்போலும்.

இவ்வாறு மூலப்பிரதிகளிற் காணப்பட்ட பாடங்கட்கிணங்கவே முன்னோரெழுதிவைத்த வுரைகளுஞ்சிலவுள. நான்மணிக்கடிகையுள்,

மொய்சிதைக்குமொற்றுமையின்மையொருவனேப்
பொய்சிதைக்கும்பொன்போலுமேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும்பாலின்சுவையைக்குலஞ்சிதைக்குங்
கூடார்கட்கூடிவிடின். (செய்— 23)

என்ற பாட்டில் "ஒருவனேப் பொய்சிதைக்கும் பொன்போலு மேனியை" என மூலபாட மெழுதப்பட்டிருத்தலால் அதற் கிணங்க "ஒருவனேத் தன் பொன்போலுமேனியைத் தானுரைக்கும் பொய்

கெடுக்கும்" என வுரையெழுதப்பட்டிருக்கிறது. பொய் மேனியைச் சிதைக்குமென்பது தகுதி சாலாததாகவும், வழக்கு வழிப்படாததாக வுங் காணப்படுகிறது. "பொய்யுளான் மறந்தோர் மெய்ம்மை புக லினும் பொய்யதாகும்" எனக் காசிரகசியம் கூறுதலால் "பொய் சிதைக்கும் பொன்போலும் மெய்யினை" என விருப்பின் அது தகுதி சான்றதும் வழக்கு வழிப்பட்டதுமாம். ஆகவே உடல் என்னும் பொருளில் மெய், மேனி என்ற சொற்கள் பரியாயப்பெயராய் வழங் கப்பட்டமையாற் பாடமின்றியே எடெழுதுவோர்க்கு மெய்யென்ற துணையானே பராக்கினால்வந்த வுடலுணர்ச்சிவாயிலாக, அதன் பெயரை நினைந்து "பொன்போலுமேனியை" யென்றெழுதவுங் கூடும். அங்ஙனமெழுதிய பிரதியின் பரம்பரையாலப்பாடம் பரவுதலு மியலும். அப்பாடம்பற்றி யதற்கேற்ப வுரையெழுதினோர் "ஒருவனைத் தன் பொன்போலுமெனியைத் தானுரைக்கும் பொய் கெடுக்கும்" என்றுரையெழுதலும் பொருந்தும். ஆயினும் 'பொன்போலு மெய் யினை' யென்னும் பாடம் கிடைக்கவேண்டும்.

இவ்வாறு ஒரு நூலின் மூலமும் உரையும் வேறுபட்டிருக்கப் பிறிதோரிடத்து வேறுபாடம் கிடைப்பதுமுண்டு. ஐங்குறுநூற்றில் தொண்டிப்பத்துள்,

> தோளுங்கூந்தலும்பலபாராட்டி
> வாழ்தலொல்லுமோமற்றேசெங்கோற்
> குட்டுவன்றொண்டியன்ன
> வெற்கண்டுநயந்துநீநல்காக்காலே.

என மூலமும், இதற்குத் "தலைமகன் தோழியை யிரந்து குறையுறு வான் சொல்லியது" எனத் துறையமைப்பும், "செங்கோற்குட்டுவன் றொண்டியன்னவென்" என்றது "தன்னைத் தேறுதற்பொருட்டுத் தன் செப்பங்கூறியவாறு". எனத் தாற்பரியமும் எழுதப்பட்டிருக் கின்றன. இப்பாட்டு நம்பியகப்பொருளுரையில்,

> தோளுங்கூந்தலும்பலபாராட்டி
> வாழ்தலொல்லுமோவண்கோற்குட்டுவன்
> றொண்டியன்னவேற்கட்
> கண்டுநயந்துநீநல்காக்காலே.

எனத் தன்னிலை தலைவன்சாற்றற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இவ்விரண்டு பாடங்களுள் நம்பியகப்பொருளுரையின்கணுள்ள "குட்டுவன், றெண்டியன்னவேற்கண்" என்பது தலைவன் தலைமகளை வியந்துரைத்தலாற் றூற்பரியத்தால் வழுக்களையவேண்டாமையாலும் பின்னிரண்டடியு மெதுகைத்தொடைபெற் றின்பம்பயத்தலாலும் அவை செவ்வியவாகக் காணப்படுகின்றன. இப்பாடம் ஐங்குறுநூற்றுரைகாரர்க்குக் கிடைத்திருப்பின் இடர்ப்பாடுற்றுத் தாற்பரியவுரையெழுதி யமைவுடையதாக்கத்தகும் அப்பாடம் கொள்ளார். ஆதலால் ஏடெழுதுவார் ஏட்டிற் சிறிது சிதைந்தவிடத்துள்ள மூலபாடங்களைத் தமக்குத் தோன்றியவளவிற்றிருத்தி யெழுதிவைப்பதுகொண்டு இப்பாடபேத முண்டாயிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. "வண்கோக்குட்டுவன்" எனப் பாடங்கிடைப்பின் இன்னும் செவ்விதாம்.

இவ்வாறே இராமாயணத்திற் பலபல பாடபேதங்களும் இடைச்செருகலான சில செய்யுட்களுங் காணப்படுகின்றன. இவ்வாறே வடமொழியிலும் இதிகாசங்களிற் சில பிரதிகளில் அதிக பாடங்கள் காணப்படுகின்றனவென்றும் அவை க்ஷீஹ்டி) இடைச்செருகல் என்றும் கூறுகின்றனர்.

பண்டைக்காலத்து உரைகளிலும் இடைச்செருகலுள்ளன. தொல்காப்பிய வுரையில் உரையாசிரியருரையென்று கொண்டெழுஞ் சங்கைகளை யொழிக்கும் சேனாவரைய வாக்கியங்களின் குறிப்பால், உரையாசிரியருரையென்று காட்டும் அவ்வாக்கியங்கள்பலவு மிடைச்செருகலெனத் தோன்றுகின்றன. இதற்கு உரையாசிரிய ருரைப்பிரதிகளில் அவ்வாக்கியங்கள் சில வேறுபட்டிருத்தலும், சில காணப்படாமையும் சான்றாகின்றன.

இன்னும் திருக்கோவையாரின் முதற்பாட்டுரையில் உரைக்கு உரையுரைத்த வாக்கியங்கள் சில காணப்படுகின்றன. அவை "திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம்" என்றது அழகு, என்னுந் தொடக்கத்தன. அவற்றிடையே, இன்பத்தை

நுதலிய தென்றுராயினும் இன்பந் தலைக்கீடாக அறம் பொரு ளின்பம் வீடென நான்கு பொருளையு நுதலிற்று;என்ற வாக்கிய மிருக்கிறது. இதனுள் என்றுராயினும் என்னும் படர்க்கைக்கூற்றால் இவ்வாக்கிய மெழுதியவர் வேறெனவும், "இப்பாட் டென்னுதலிற்றோவெனில் அறம் பொருள் இன்பம் வீடென்னும்நான்குபொருளில் இன்பத்தை நுதலி..................வுணர்த்துதனுதலிற்று. என அவதாரிகை யெழு தியவர் வேறொருவ ரெனவும் கொள்ளற் கிடனுண்டாகின்றது. வேறொருவராயிருப்பின் இங்ஙனம் உரைக்குரையாக வெழுதியுள்ள சில வாக்கியங்க ளிடைச்செருகலென்பது பெறப்படும்.

இதுவன்றியும் உரையின் இரண்டாம்பத்தியில் வாய்ந்தென்பது நடையின் வினையாகலாற் சினைவினைப்பாற்பட்டு முதல் வினையோடு முடிந்தது; என வினைமுடிபிலக்கணமெழுதப்பட்டிருக்கிறது. இதற்கு உரையின் பத்தாவது பத்தியில் யாதோ ரியைபுமின்றி "வாய்ந்தென் பது நடையின்வினையாகலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்தது" என்றது அன்னத்திற்குச்சினை கால், காலிற்குச் சினை நடை ஆகையால் முதலென்றது அன்னத்தை என விவரண மெழுதப் பட்டிருக்கிறது. இவ்விவரணம்

திருவளர்தாமரைசீர்திகழ்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குசெங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினெல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

என்னு மிப்பாட்டினுள் மாலை நடைவாய்ந்து ஒளிர்கின்றது. என் னுந் தொடருக்கு (இரண்டாம் பத்தியில்) வினைமுடிபுரைத்த வாக் கியக் கருத்தை விளக்கவந்ததாகக் காணப்படுகிறது. இங்கு வினை முடி புரைக்கக்கருதிய வினை முதற்பொருள் அன்னமென்றது பொ ருந்துமா? அதன் வினையாது? அதனுடன் முடிவதெங்ஙனம்? என வினவுவார்க்கு விடைதருதலரிது. இங்குமுடிக்குஞ் சொல்லாகிய ஒளிர்கின்றதென்னும் வினைக்கு மாலையே வினைமுதலாம்; அன்னம் வினைமுதலன்று. மாலையொளிர்கின்றதென வியையும்; அன்னம், ஒளிர்கின்றதென்பதோடியையாது நடைக்கடையாகக் கிடக்கின்றது.

அனநடைவாய்ந்து என அன்னத்தின் நடையை மாலைக்கேற்றிக் கூறினமையால் அனநடை மாலைக்கு உறுப்பும் அம்மாலை அந்நடைக்கு முதலுமாயின. மாலைக்கு நடை உறுப்பாகக் கருதப்பட்டமையால் அதன் வினையாகிய வாய்தல் சினைவினைப்பாற்பட்டதெனவும் அது அந் நடையுடையதாகக் கருதப்பட்ட மாலையின் வினையாகிய ஒளிர் தலைக்கொண்டு முடிதலால் முதல்வினைகொண்டு முடிந்ததெனவும் உரைகாரர் கருதினரெனக் கொள்ளினும் ஒருவாறு பொருந்தும்.

இம் முறையினன்றி அன்னத்திற்குச் சினை கால் காலுக்குச் சினை நடை ஆதலால் முதலென்றது அன்னத்தை யென்றெழுதியது "எழுத்தென்பரின்புலவோர்" என்று சிறப்பிக்குமாறு அரிய விலக் கணங்களா லமைந்த திருக்கோவையாரின் நிட்ப நுட்பங்களையுணர்த் திச் செல்லும் பேரறிவாளராகிய அவ் வுரைகாரர் கருத்துக்கொரு சிறிதும் பொருந்தாமையால் தேர்ச்சியில்லாதார் தமக்குத் தெரிந்த வாறெழுதிச் சேர்த்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. இவ்வாறே நன்னூல் விருத்தியுரை முதலியவற்றிலும் பலவிடங்களி லிடைச்செருகல் காணப்படுகின்றன. அவை யெல்லாம் பண்டிதர் கள் கண்டிருக்கக் கூடுமாதலாற் கற்பவர்க்கெல்லாம் பயன்படுமாறு ஒவ்வொருவரும் செந்தமிழிற் சிறிது சிறிதாக வெளியிட்டு வரு வாராயின் அது தமிழ்நூல் பலவு முருவழியாது நிலைபெறுவதற்கும் தமிழ் நாடு தமிழ்ப்புலமை தலைசிறந்து விளங்குதற்கும் பெரிதும் சாதகமாம்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

சிவமயம்.

மநுநீதிகண்ட சோழர்காலம்.

———:0:———

மநுநீதிகண்ட சோழர் திருவாரூரை ராஜதானியாகக்கொண் டரசியற்றிய சோழர்களு ளொருவர். அவர் மநுநீதி சிறிதும் வழுவா தரசியற்றியவராதலின் மநுநீதிகண்ட சோழரெனப்பட்டார். அவ ருடைய நீதித்திறம், ஒருநாள், தற்செயலாயோடித் தமது புத்திர னூர்ந்துசென்ற தேர்க்காலின்கீ ழகப்பட்டிறந்த வொரு பசுக் கன்றுக்காக அவனுயிர்வாங்கியவாற்ரு னுணரப்படும்.

இலங்கை அரசருள்ளும் B. C. 161-க்கு முன்னே அரசுசெய்த ஏலேலனை நீதியிலே மநுவெனக் கூறுவர். அவனும் தனது சயன மண்டபத்திலே மஞ்சத்திலே ஒரு மணிகட்டி அதனை அசைத்தடிக்கு மாறு ஒரு கயிறுதொடுத்துக் கோபுரவாயிலில் விட்டிருந்தானென் றும், குறையுடையோர் அதனை யிழுத்தசைத்துத் தங்குறை யெடுத் துரைப்பரென்றும், ஒருநாள் அவன் மகன்சென்ற தேர்க்காலின் கீழோ ரான்கன்று தற்செயலா யகப்பட்டிறக்க அதன்பொருட்டு அம்மைந்தனுயிரை வாங்கினனென்றும் மகாவமிசமென்னும் சிங்கள சரித்திரங் கூறுகின்றது. பெரியபுராணத்திற் கூறப்படும் மநுநீதி கண்ட சோழர் சரித்திரமும் மகாவமிசத்திற் கூறப்படும் ஏலேலன் சரித்திரத்தில் பசுவுக்கு முறைசெய்த பகுதியும் ஒரு சிறிதும் வேற் றுமையின்றி ஒத்திருக்கின்றன. இருவர் பெயரும் ஊரும் வேறு படுவதேயன்றிச் சரித்திரத்தில் வேறுபாடுசிறிதுமில்லை. சோழரும் ஓராராய்ச்சிமணி கட்டியிருந்தார். ஏலேலனும் ஒரு மணி கட்டி யிருந்தான். அங்குந் தாய்ப்பசுவேசென்று மணியையடித் தலறிற்று. இங்குந் தாய்ப்பசுவேசென் றவ்வாறுசெய்தது. அங்கும் ஏக புத்திரன். இங்கும் ஏகபுத்திரன்.

மநுநீதிகண்ட சோழர் சரித்திரம் பெரியபுராணத்தில் மாத்திர மன்று. சிலப்பதிகாரத்திலும் கூறப்படுகின்றது. அது,

"வாயிற்கடைமணிநடுநாநடுங்க
வாவின்கடைமணியுகுநீர்நெஞ்சுசுடத்தான்ற
னரும்பெறற்புதல்வனையாழியின்மடித்தோன்"

என்பதனாலறிக. அது கலிங்கத்துப் பரணியினுஞ் சுட்டப்படு கின்றது. அது,

"அவ்வருக்கன்மகனாகிமநுமேதினிபுரந்
தரியகாதலனையாவினதுகன்றுநிகரென்,
றெவ்வருக்கமும்வியப்பமுறைசெய்தகதையும்"

என்பதனாலறிக. அதுநிற்க,

இவருள் எவர்முந்தியவர் என்பது இங்காராயத்தக்கது. ஏலேலன் B. C. 205 முதல் B.C. 161 வரையும் அநுராதபுரியிலிருந் திலங்கை யரசியற்றினேன் என்பது மகாவமிசம். மநுநீதிகண்ட சோழர் மகன் வராமதேவசோழன். அவன்மகன் குளக்கோட்டன். அவன் திரிகோணமலைக்குவந்து ஆங்குள்ள சிவாலயம் புதுக்கி நிபந்தம் அமைத்தானென்றும் அது நிகழ்ந்தது கலியுகம் 512 இடபமதி 10வ என்றும் திரிகோணமலைக் கல்வெட்டுக் கூறுகின்றது. இது நம்பத் தக்க அதிபுராதன சாசனமென்பது அநேகர் துணிபு. நம்பத்தக்க தாகுமாயின் மநுநீதிகண்ட சோழர்காலம் இற்றைக்கு 4500-வருடத் துக்கு முற்பட்டதாகும்.

யாழ்ப்பாணம்,
நாவலர்கோட்டம்.
8—12—12.

இங்ஙனம்,

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஔவையாரது நீதிநூல்கள்

(பத்தாந்தொகுதியின் ௫௨௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(21) "மநஸ்யந்யத்வசஸ்யந்யத்கர்மண்யந்யத்துராத்மநாம் ।
மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம்" ॥

இதன் பொருள்:—தீயோருடைய மனம் வேறும், சொல் வேறும், செய்கை வேறுமாயிருக்கும். நல்லோருடைய மனமு மொன்று, சொல்லு மொன்று, செய்கையு மொன்றேயாம்.

"மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பான் மேவு—மனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண்."

நீதிவெண்பா 75.

(22) "ஸந்தேஹஸ்ஸுஜநஸ்யாபி துர்ஜநத்வேந பாவ்யதே ।
ராத்ரௌ வல்மீகஸம்பூதோ ரஜ்ஜு: ஸர்பாயதே யதா" ॥

இதன் பொருள்:—சந்தேகப்பட்ட விடத்தைப்பற்றி யதுகாரணமாக நல்லவனும் கெட்டவனென்று கொள்ளப்படுவான். இரவு நேரத்திற் பழுதையானது புற்றடுத்துக்கிடந்தாற் பாம்பென்றே நினைக்கப்படுமன்றே.

"நல்லொழுக்க மில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்க மில்லாச்சொ னண்ணுமே—கொல்லும்விடப்
பாம்பெனவுன் னுரோ பழுதையே யானுலுக்
தூம்பமரும் புற்றடுத்தாற் சொல்."

நீதிவெண்பா 86.

(23) "ஹீநஸேவா ந கர்தவ்யா கர்தவ்யோ மஹதாச்ரய: ।
பயோபி சௌண்டிகீஹஸ்தே வாருணீத்யபிதீயதே" ॥

இதன் பொருள்:—கீழோரை நாடிச் சேர்தலாகாது. பெரியோரை நாடிச் சேர்தல்வேண்டும். கள் விற்பவளிடத்துப் பாலை வாங்கிப் பருகினும் கள்ளென்றே கருதப்படும்.

“நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.”

நீதிவெண்பா 79.

(24) “𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍇𑌵 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌜𑍍𑌜𑌨𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌮𑌂 ।
𑌨𑌹𑌿 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌗𑍁𑌰𑍍𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌸𑌵𑌵𑍇𑌦𑌨𑌾𑌂 ” ॥

இதன் பொருள்:—படித்தவரது பெருமையைப் படித்தவரே யறிவார். பிள்ளையைப் பெறும் பெருந்துயரம் மலடி யறியாளன்றோ?

“கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்.”

நீதிவெண்பா 15.

(25) “𑌵𑌰𑌮𑍇𑌕𑍋 𑌗𑍁𑌣𑍀 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌨 𑌚 𑌮𑍂𑌰𑍍𑌖𑌶𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 ।
𑌏𑌕𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑌮𑍋 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌚 𑌤𑌾𑌰𑌾𑌗𑌣𑍋𑌽𑌪𑌿 𑌚 ” ॥

இதன் பொருள்:—மூர்க்கர்களாயுள்ள பல புத்திரர்கள் இருப்பதினும், நற்குணமுள்ள ஒரு புத்திரன் இருப்பதே நலமாகும். ஒரு சந்திரன் இருளை யகற்றுகின்றான். எண்ணிறந்த நக்ஷத்திரங்களிருந்தும் ஆவதில்லை.

“கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ—வல்லாரு
மெண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.”

நீதிவெண்பா 98.

(26) ஜிஹ்வாக்ரே வர்த்ததே லக்ஷ்மீர் ஜிஹ்வாக்ரே மித்ரபாந்தவா: ।
ஜிஹ்வாக்ரே பந்தநப்ராப்திர் ஜிஹ்வாக்ரே மரணம் த்ருவம் ”॥

இதன் பொருள்:—ஒருவனுக்கு வந்துறுஞ் செல்வம் அவனது நாவினுனியைச் சார்ந்திருக்கும். ஒருவனுக்குண்டாகும் நண்பரும் பந்துக்களும் அவனது நாவினுனியைப் பற்றியே யாவர். ஒருவன் சிறைச்சாலையில் அடைவதும் அவனது நாவினுனியைச் சார்ந்திருக்கும். ஒருவன் உயிரிழக்க நேருவதும் அவனது நாவினுனியைப் பற்றியதாகவிருக்கும்.

“நாவி னுனியி னயமிருக்கிற் பூமாது
நாவினிய நல்லோரு நண்ணுவார்—நாவினுனி
யாங்க டினமாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஞங்கே வருமரண மாம்.”

நீதிவெண்பா 17.

(27) “கிம் கரிஷ்யந்தி வக்தாரோ ஶ்ரோதாரோ யத்ர நிர்விவேகின: ॥
நக்நக்ஷபணகே தேஶே ரஜக: கிம் கரிஷ்யதி ” ॥

இதன் பொருள்:—சொல்லினும் கேட்டுணராத துஷ்டர்களிடத்து, நற்குணம் வாய்ந்த பெரியோர் ஒன்றும் சொல்லப்புகார். நிர்வாணிகளாகிய சமணர்களினூரில் வண்ணானுக்கு வேலையுண்டோ?

“குணநன் குணராக் கொடியோ ரிடத்திற்
குணநன் குடையார் குறுகார்—குணமுடைமை
நண்ணுச் சமண நகரத்திற் றூசொலிக்கும்
வண்ணானுக் குண்டோ வழக்கு.”

நீதிவெண்பா 26.

(28) “தர்மோ ஜயதி நாதர்ம: ஸத்யம் ஜயதி நாந்ருதம் ।
க்ஷமா ஜயதி ந க்ரோதோ விஷ்ணுர்ஜயதி நாஸுரா: ” ॥

இதன் பொருள்:—தருமம் வெல்லும்; அதருமம் வெல்லாது. மெய் வெல்லும்; பொய் வெல்லாது. பொறுமை வெல்லும்; கோபம் வெல்லாது. விஷ்ணு வெல்லுவர்; அசுரர் வெல்லார்கள்.

"சத்தியத்தை வெல்லா தசத்தியந்தா னீள்பொறையை
மெத்திய கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்"

நீதிவெண்பா 53.

(29) "𑌶𑌿𑌵𑌾𑌶𑌿𑌵 𑌶𑌿𑌵𑌾𑌶𑌿𑌵 𑌶𑌿𑌵𑌾𑌶𑌿𑌵𑍇𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।
𑌵𑌤𑍍𑌸𑌂 𑌗𑍌𑌰𑌿𑌵 𑌗𑍌𑌰𑍀𑌶𑍋 𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌧𑌾𑌵𑌤𑌿 " ॥

இதன் பொருள்:—ஓடித்திரிகின்ற தன் னிளங்கன்றைப் பசுவானது பிரியாமற் பற்றிச்செல்லுவதுபோல, சிவனே சிவனே சிவனே யென்று சொல்லுவாரைச் சிவபெருமான் றொடர்ந்து திரிவார்.

"சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவனுமையா ளோடுந் திரிவன்—சிவனருளாற்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து."

நீதிவெண்பா 58.

(30) "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑌨𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌯 𑌅𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑌨𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 ।
𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌯𑌤𑍇 𑌸𑍁𑌰𑌾 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌦𑌧𑌿 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌗𑍃𑌹𑍇 𑌗𑍃𑌹𑍇 " ॥

இதன் பொருள்:—ஜனங்கள் மெய்யைத்தள்ளிப் பொய்யை விரும்புவார்கள். கள் தானிருந்தவிடத்திலேயே விலைப்படும். தயிரும் பாலும் வீடுதோறும் சென்று விலைப்படும்.

"சத்தியமெக் காலுஞ் சனவிருத்த மாகுமே
யெத்தியபொய் யார்க்கு மிதமாகு—நத்தியபால்
வீடுதொறுஞ் சென்று விலையா மதுவிருந்த
வீடுதனி லேவிலையா மே."

நீதிவெண்பா 85.

(31) "𑌗𑌂𑌗𑌾 𑌪𑌾𑌪𑌂 𑌶𑌶𑍀 𑌤𑌾𑌪𑌂 𑌦𑍈𑌨𑍍𑌯𑌂 𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍁𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌪𑌾𑌪𑌂 𑌤𑌾𑌪𑌞𑍍𑌚 𑌦𑍈𑌨𑍍𑌯𑌞𑍍𑌚 𑌹𑌨𑍍𑌤𑌿𑌸𑌂𑌤𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌃" ॥

இதன் பொருள்:—கங்கைநதி பாவத்தைப்போக்கும்; சந்திரன் வெப்பத்தை நீக்கும்; கற்பகவிருக்ஷம் வறுமையை மாற்றும். பெரியோர்களது சேர்க்கை பாவத்தையும் வெப்பத்தையும் வறுமையையும் போக்கும்.

"கங்கைநதி பாவஞ் சசிதாபங் கற்பகந்தான்
மங்க லுறும் வறுமை மாற்றுமே—துங்கமிகு
மிக்குணமோர் மூன்றும் பெரியோ ரிடஞ்சேரி
லக்கணமே போமென் றறி."

நீதிவெண்பா 100.

(32) "𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑌰𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑍍𑌨 𑌮𑍂𑌰𑍍𑌖𑍋 𑌹𑌿𑌤𑌕𑌾𑌰𑌕𑌃 ।
𑌵𑌾𑌨𑌰𑍇𑌣 𑌹𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌚𑍌𑌰𑍇𑌣 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃" ॥

பஞ்சதந்த்ரம், I. தந்த்ரம்.

இதன் பொருள்:—மூடனாகவுள்ள நண்பனினும் பண்டிதனாகவுள்ள பகைவன் நல்லன். குரங்கு வேந்தைக் கொன்றது. திருடன் வேதியரைக் காப்பாற்றினன்.

"அறிவன் பகையேனு மன்புசேர் நட்பாஞ்
சிறுவன் பகையாஞ் செறிந்த—வறிவுடைய
வென்றி வனசான்றன் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு."

நீதிவெண்பா 3.

(33) "𑌸𑍁𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑍁𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾 𑌨𑌕𑍁𑌲𑌾𑌦𑌿𑌵" ॥

இதன் பொருள்:—எதனையும் தீரவிசாரித்துச் செய்யவேண்டும். தீரவிசாரியாது செய்யலாகாது. அன்றேல், பார்ப்பினிக்குக் கீரியினல் மனத்துயரம் நேர்ந்ததுபோல, நேரும்.

"செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு

நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்."

நீதி வெண்பா 16.

(34) "காகைஃ க்ருதஸ்ய தோஷேண ஹம்ஸோ விநிஹிம்ஸிதஃ।
ஏவம் துர்ஜநஸம்ஸர்காத் ஸஜ்ஜநோபி விநஶ்யதி" ||

இதன் பொருள்:—காகங்கள் புரிந்த செய்கையின் கெடுதியால், அன்னப்பறவை துயரமுற்றது, இவ்வாறே, தீயோர்களின் சேர்க்கையால் நற்குடியிற் பிறந்த பிள்ளையும் கெடுவான்.

"நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர்சேருங்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
வன்னமுதற் பட்டதுபோ லாம்."

நீதி வெண்பா 74.

(35) "ஶ்ருதமிச்சந்தி பிதரோ தநமிச்சந்தி மாதரஃ।
பாந்தவாஃ குலமிச்சந்தி ரூபமிச்சந்தி கந்யகாஃ" ||

இதன் பொருள்:—தந்தைமார் கல்வியை விரும்புவார். தாய்மார் செல்வத்தை விரும்புவார். உறவினர் நற்குடியை விரும்புவார். பெண்கள் அழகை விரும்புவார்.

"பெண்ணுதவுங் காலைப் பிதா விரும்பும் வித்தையே
யெண்ணி றனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடையிற்
கூறியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்."

நீதி வெண்பா 81.

(36) "குருபத்நீ ராஜபத்நீ ஜ்யேஷ்டபத்நீ ததைவ ச।
பத்நீமாதா ஸ்வமாதா ச பஞ்சைதா மாதரஃ ஸ்ம்ருதாஃ" ||

இதன் பொருள்:—குருவின் மனைவியும், அரசன் மனைவியும், தமையன் மனைவியும், தன்மனைவியைப் பெற்றவளும் தன்னைப் பெற்றவளும் ஆகிய இவரைவரும் தாய்மாரெனப்படுவார்.

"தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லெவருக்கு
நற்றாய ரென்றே நவில்."

நீதி வெண்பா 42.

(37) "ஸ்தாந ஏவ ஹி ஶோபந்தே தந்தா: கேஶா நகா நரா: ।
ஸ்தாநாத் ஸ்தாநப்ரஷ்டா ந ஶோபந்தே தந்தா: கேஶா நகா நரா:॥

இதன் பொருள்:—பற்களும் தலைமயிரும் நகங்களும் மனிதர்களும் இருக்குமிடத்திலிருந்தால் மேன்மை யடைவார். யானைத்தந்தங்களும், கவரிமான் மயிரும், புலிநகங்களும், கற்றறிந்த மனிதர்களும் எவ்விடத்துச் செல்லினும் மேன்மை யடைவார்.

"தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்த
நிலைபுடைய மானவரு நிற்கு—நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவருந்
தானத்திற் பூச்சியமோ தான்."

நீதி வெண்பா 28.

"ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றோரு—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தவிடத் தன்றோ சிறப்பு."

நீதி வெண்பா 27.

(38) "முகம் பத்மதலாகாரம் வசஶ்சந்தந ஶீதலம் ।
ஹ்ருத் கர்த்தரீஸமம் சாதிவிநயோ வஞ்சகலக்ஷணம்" ॥

இதன் பொருள்:—தாமரைமலர் போன்றழகிய முகமும், சந்தனம் போற் குளிர்ச்சி பொருந்திய வார்த்தையும், கத்தரியைப்போற் கொடிதாகிய மனமும், மட்டுக்கு மிஞ்சிய வணக்கமும் வஞ்சகர்களுக்குரிய அடையாளங்களாம்.

"செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனந்
தங்கு மொழிசந் தனம்போலும்—பங்கியெறி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்."

நீதிவெண்பா 23.

(39) "அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் ।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி ஶதைரபி" ॥

இதன் பொருள்:—நல்வினை தீவினையாகிய இருவினைகளாலாய பயன்களையும் அநுபவித்தே தீரவேண்டும்; நூறுகோடி கற்பகாலங் கழிந்தாலும் அநுபவியாமல் தீரா.

"தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்த றப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுந் தோகையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து."

நீதிவெண்பா 47.

(40) "மக்ஷிகா வ்ரணமிச்சந்தி தநமிச்சந்தி பார்த்திவா: ।
நீசா: கலஹமிச்சந்தி ஸந்திமிச்சந்தி ஸாதவ:" ॥

இதன் பொருள்:—ஈக்கள் புண்ணை விரும்பும். அரசர்கள் பொருளை விரும்புவார்கள். கீழோர் கலகத்தை விரும்புவார்கள். மேலோர்கள் சிநேகத்தை விரும்புவார்கள்.

"காந்துநறும் புண்ணைக் கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு."

நீதிவெண்பா 82.

(தொடரும்.)

டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி.

புட்பபந்தம்.

———:O:———

(பத்தாந்தொகுதியின் ௫௦௦-ஆம் பக்கந்தொடர்ச்சி.)

ஒருநாடியிற் சந்திரனும் அங்காரகனுமாவது அல்லது குருவுஞ் சந்திரனுமாவது கூடியிருந்தால் நல்ல மழை பொழியும்.

புதனுஞ் சுக்கிரனுங் குருவுஞ் சந்திரனுஞ் சேர்ந்தால் விசேட மழையுண்டு.

அசுவதியில் இரவியிருக்கும்போது மழைபெய்தால் முற் பயிர்கள் பலிக்கும். பரணி கார்த்திகைகளி லிருந்தால் எல்லாப் பயிருஞ் செழித்துப் பலிக்கும். இரேவதியில் இருக்கும்போது பின்பயிர் யாவும் பலிக்கும்.

குருவுஞ் செவ்வாயு மேகநாடியி லிருக்கும்போது சந்திரன் *ஜல ராசியிலிருந்தாற் பூமியில் விசேஷமாய் மழை பொழியும்.

சூரியனுக்குஞ் சுக்கிரனுக்கும் முன்னே அங்காரகன் நடந்தாற் பனிபோல் தூறலும் சுழிமழையும் உண்டு.

குருவுஞ் சூரியனும் அல்லது குருவுஞ் சுக்கிரனும் சமசத்த மத்திலிருந்தால் மழையில்லை.

சுபக்கிரக நாடியிற் சுபக்கிரகங்களிருந்து சந்திரனும் அந்தச் சுபக் கிரகங்களோடு கூடினால் விசேட மழையுண்டு.

---

* மகர கடக கும்ப மீனம்.

இவைபற்றி இடபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் இவ் வேழுஞ் சலராசிகளாமெனவும், இவைகளுள் பூர்ண ஜலராசியாவன கடக மீன மிவையெனவும், முக்காற்சலராசியாவன மகரகும்ப மிவையெனவும், அரை ஜலராசியாவது துலாமெனவும், காற் சலராசியாவன ரிஷப விருச்சிக மிவை யெனவும் ஞானப்பிரதீபிகையின் கூபகாண்டத்துப் பதினொன்றாவது சுலோகத் தானும், சரிதாகமன காண்டத்து மூன்று நான்காவது சுலோகங்களானும் அறியக்கிடக்கின்றன.

சௌமிய நாடியிலாவது ஜலநாடியிலாவது சௌமிய கிரகங்களோடு சந்திரன் கூடினால் மழையோக மென்ப.

ஓரிராசியில் புத சுக்கிர சந்திரர் கூடினாலும், சௌமிய நாடியிற் கூடியிருந்தாலும் விசேட மழையுண்டு.

சூரியன் சந்திரன் சநி இவர்கள் வெவ்வேறு நாடிகளிலிருந்தால் உற்பாதங்கள் உண்டாகும். அரசர்களுக்குள் யுத்தமுண்டு.

மழைக்காலத்திற் சுக்கிரன் சுக்கிர நாடியிலிருந்து அஸ்தமனமாகாமலிருந்தால் நல்ல மழைபெய்யும்; நாடு செழிக்கும்.

ஆண்கிரகமும் ஆண்கிரகமும் இராசியிற் சேர்ந்தால் தாபம் என்ப. அலிக்கிரகமும் அலிக்கிரகமுஞ் சேர்ந்தாற் குளிர்ச்சியென்ப. பெண்கிரகமும் பெண்கிரகமுஞ் சேர்ந்தால் துர்த்தினமென்ப. ஆண்கிரகமும் பெண்கிரகமுஞ்சேர்ந்தால் மழையென்ப. பெண்கிரகமும் அலிக்கிரகமுஞ் சேர்ந்தாற் காற்றென்ப. ஆண்கிரகமும் அலிக்கிரகமும் சேர்ந்தால் மழையென்ப.

இரேவதி உரோகணி சுவாதி அநுடம் இந்த நக்ஷத்திரங்களில் அங்காரகன் இருந்தால் மிக்க வெய்யிலும் அனாவிருஷ்டியும் உண்டு.

புத சுக்கிரர்க்கு முன்னே சூரியனிருந்தால் சம்வர்த்த ஜலயோகமென்ப. அஞ்ஞான்று விசேட மழையுண்டு.

புதன் சுக்கிரர்க்கு மத்தியில் அங்காரகனிருந்தாற் காற்றடிக்கும்.

புதன் சுக்கிரர்க்கு மத்தியில் இரவியிருந்தாற் கடல் வற்றும்.

இவர்களுக்கு மத்தியிற் சந்திரனிருந்தாற் காற்று, மழை, கன்மழை இவையுண்டாகும்.

ஜலராசியிற் சந்திரனிருக்குங்காலை அவற்கு நான்கிலாவது ஐந்திலாவது ஒன்பதிலாவது சூரியனுஞ் சனியுஞ் சுக்கிரனு மிருந்தால் நன்மழை பொழியும்.

கிரகங்கள் உதயாஸ்தமனமானாலும் வக்கிரமானாலும் நன்மழையுண்டு.

புத சுக்கிரோதய காலங்களிற் குருவோடு சந்திரன் கூடியிருந்தாற் சந்திரயோகமென்ப. அஞ் ஞான்று நன்மழை பொழியுமென்க.

ஜலராசியி னதிபதிகளோடாவது ஜலராசிகளிலாவது * ஜல நக்ஷத்திரங்களிலாவது சந்திரனிருக்குங் காலங்களில் மழைபெய்யும்.

குரூர கிரகங்களோடாவது அல்லது சுபக்கிரகங்களோடாவது சந்திரன் சேர்ந்து ஜலநக்ஷத்திரங்களிலிருந்தாற் பூரண விருஷ்டியுண்டு.

உதயாஸ்தமனமாயிருக்குங் கிரகங்கள் வக்கிரித்தாலும் சங்கிரமண காலத்திற் சலராசியிலிருந்தாலும் மழை தூறலாயிருக்கும்.

இரவி, குரு, புதன் இக்கிரகங்களோடு சந்திரன் சேர்ந்தால் விசேஷ மழை பெய்யுமென்று பிரமயாமளங் கூறுகின்றது.

குஜனோடு சந்திரன் சேர்ந்து இவர்களுக்கு ஐந்தில் புத சுக்கிரர்களிருந்தால் அதிவிருஷ்டி யுண்டாகுமென்று லம்பாகங் கூறுகின்றது.

குஜன் சுக்கிரன் புதன் இவர்கள் ஓரிராசியில் அவரவரின் சொந்த திரிம்சாம்சத்திலிருந்தால் அதிக மழையுண்டென்றும் அந்நியர்களின் திரிம்சாம்சத்திலிருந்தாற் சொற்ப மழையுண்டென்றும் அறியக்கிடக்கின்றது.

சுக்கிரன் புதன் சந்திரன் ஓரிராசியிலிருந்தால் அதற்குச் சென்மராசியென்ப. அஞ்ஞான்று அதிவிருஷ்டி யுண்டாமென்று மநு சொல்லுகின்றார்.

சிங்கத்திற் சந்திரனும் ரிஷபத்திற் சுக்கிரனும் மிதுனத்திலாவது கடகத்திலாவது புதனும் இருந்தாற் காற்பாகம் மழைபெய்யும்.

இலக்கினத்திற்கு 5, 2, 3, 8ல் சுக்கிரனுஞ் சனியும் வக்கிரித்திருந்தாலும், சத்தமத்திற் சந்திரனிருந்தாலும் விசேட மழைபெய்யுமென்று ஆரூடஞ் சொல்லவேண்டும்.

---

* ஜல நக்ஷத்திரங்கள்:—உரோகணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயில்யம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, கேட்டை, பூராடம், திருவோணம் ஆம் இவைகளெனச் சோதிடகிரகசிந்தாமணி கூறுகின்றது.

ஆரூட லக்கினத்திற்கு ஐந்திலாவது ஆறிலாவது குருவுஞ் சந்திரனு மிருந்து புத சுக்கிரர்களாற் பார்க்கப்பெற்றால் இடியோடு கூட அதிவிருஷ்டி யுண்டாகும்.

ஆரூட லக்கினம் ஜலராசியானாலும் சந்திரன் ஜலராசியிலிருந் தாலும் ஆரூட லக்னாதிபன் மித்ரு ஸ்தானத்திலிருந்தாலும் மழை யுண்டு.

வருஷப்ரசன சுக்கில பக்ஷமாயிருந்து லக்ன கேந்திரங்களிற் சுபர் இருந்தால் மழையுண்டு.

மேருவுக்கு வடக்கிற் பரணிமுதல் ஒன்பது நக்ஷத்திரங்களும் மத்தியத்திற் பூரமுதல் ஒன்பது நக்ஷத்திரங்களும் தெற்கிற் பூராட முதல் ஒன்பது நட்சத்திரங்களு மிருக்கின்றன.

மழைக்காலத்திற் புதன் உதயத்திற்குமுன் சுக்கிரோதயமானால் தாபமும், வெய்யிலும் சுக்கிரோதயத்திற்கு முன்னர் புதோதயமா னால் மழையும், சுக்கிரோதய காலத்தில் தெற்கிலும் வடமேற்கிலும் மின்னினாற் பயிர் விருத்தியு முண்டு.

சுவாதி ஆயில்யம் சித்திரை இந்த நக்ஷத்திரங்களிற் சுக்கிரோ தயமானால் அரசர்களுக்கு அபகீர்த்தியும், அனாவிருஷ்டியு முண்டா கும்.

சூரியனுக்கு வடக்கிற் சுக்கிரனிருந்தாற் சகலபயிருஞ் செழித்து அவ்வருஷம் நன்றாய்ப் பலிக்கும்.

பரணிமுதல் நான்குநாள்வரை சுக்கிரனுக்கு உதயாஸ்தமன முண்டானால் ஜனங்களுக்குத் தேஜோஹானியும், விசேட தானிய விளைவு முண்டு.

திருவாதிரை முதல் நான்குநாள்வரை உதயாஸ்தமனமானாற் பிராமணோத்தமர்கட்குப் பீடையும், பயிர் விருத்தியு முண்டு.

மகமுதல் ஐந்துநாள்வரை சுக்கிரோதயாஸ்தமனமானால் அரசர் மனிதர் பசுக்கள் இவர்கள் மரணமாவர்.

கேட்டை முதல் ஐந்துநாட்கள்வரை சுக்கிரன் உதயாஸ்தமனமானால் துர்ப்பிக்ஷ மெங்கு முண்டாகும். சுவாதிமுதல் மூன்று நாட்கள் வரை உதயாஸ்தமனமானால் மழை பெய்யும்.

அவிட்டமுதல் ஐந்துநாட்கள்வரை உதயாஸ்தமனமானால் அரசர்களுள் பரஸ்பரம் யுத்தமும், பயிர் விருத்தியுமுண்டு.

அஸ்வதியிற் சுக்கிரன் உதயாஸ்தமனமானாற் பிரஜைகளுக்குச் சுகமும், பயிர்விருத்தியும் உண்டு.

கிருஷ்ணாஷ்டமி சதுர்த்தசி அமாவாசியை இந்தத் திதிகளிற் கிழக்கிலும் ஈசானியதிக்கிலும் சுக்கிரோதயமானாற் பயிர் விருத்தியுண்டு.

ஜேஷ்டம், மாகம், மார்க்கசிரம், சிராவணம், கார்த்திகை இந்த மாதங்களிற் சுக்கிரோதயாஸ்தமனமானாலுஞ் சூரிய சந்திர கிரகணங்களுண்டானாலும் மழையில்லை.

பரணி கார்த்திகை பூரம் இந் நாட்களிற் சுக்கிரனிருந்து சூரியனுக்குத் தெற்கே நடந்தாலும் திருவாதிரை, மகம், விசாகம், சுவாதி, பூசம் இந் நாட்களிற் சுக்கிரனிருந்து சூரியனுக்கு வடக்கே நடந்தாலும் மழை யுண்டு.

மகம் உத்திராட மிவற்றிற் சுக்கிரன் அஸ்தமித்தாலும் வக்கிரித்தாலும் மழையில்லை. அரசர்களுட் பரஸ்பரங் கலகமுண்டு.

உத்திரத்திரயம் பூசம் இந்நாளிற் புதோதயமானால் நல்ல மழையுண்டு. இதர நக்ஷத்திரங்களில் உதயமானால் * ஈதி பாதையுண்டு.

சுவாதி, விசாகம், அநுடம் இவற்றுளொன்றிற் குருசஞ்சரிக்குங் காலத்திலும், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை இவற்றுளொன்றிற் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலத்திலும், குருவோடாவது சுக்கிரனோடாவது சந்திரன் சம்பந்தப்படுங் காலத்திலும் விசேஷ மழையுண்டு. புதன் கூடினாற் சொற்ப மழையுண்டு. சனியாவது

---

* ஈதி பாதையென்பது, பேதி அம்மை யிவற்றாற் சனங்கள்சேதமாவதும், பக்ஷி கிளி பன்றி யிவற்றாற் பயிர் நாசமாவதுமாம்.

குஜனுவது வக்கிரமாயிருந்து சுக்கிரனுேடாவது குருவோடாவது சேர்ந்தாற் புல்கிடைப்பதரிதாகிப் பசுக்கள் நாசமடையும்.

குஜன் சனி சுக்கிரன் இவர்கள் ஓரிராசியிலிருந்தால் மழையில்லை. இவர்களோடு குருசேர்ந்தால் மத்திம விருஷ்டியுண்டு.

குரு வக்கிரித்து உரோகணி மத்திய பாகத்திலிருந்தால் மழையில்லை. சுவாதி விசாகம் அநுஷம் இம்மூன்று நாளிற் குருவக்கிரித்திருந்தால் நல்ல மழையுண்டு.

அங்காரகன் வக்கிரமில்லாமலிருக்கும் பொழுது சனி வக்கிரமாயிருந்தால் ஒரு மாதம் மழையில்லை.

மார்க்கசிரமாத கிருஷ்ணுஷ்டமியிற் சித்திரை நக்ஷத்திரமிருந்து நவமியிற் சுவாதியிருந்து அவ்விருதினங்களில் ஒருநாள் மேகம்பரவி மின்னினுல் மறுவருஷம் ஆஷாட மாதச்சித்திரை சுவாதி நக்ஷத்திரங்களில் அதிவிருஷ்டியுண்டு.

புஷ்பமாச சுத்த சதுர்த்தியில் தசதாதுக்கள் தோன்றினுல் வருஷாகாலங்களில் நன்மழைபெய்து பயிர்பலிக்கும். தசதாதுக்களின் குறிகளுட் சில குறையின், பயிர் பலிதமுஞ் சிறிது குறைவாகும்.

புஷ்யமாதப் பௌர்ணமியிலும் அதனடுத்த துதியையிலும் மேகமில்லாது பனிமாத்திர மிருந்தால் ஆஷாடமாத அமாவாசியையில் நன்மழையுண்டு.

மாக சுத்த சப்தமியில் இரவும் பகலும் மேகம் பரவிக்கொண்டிருந்தாலும் அல்லது மேற்கே மின்னினுலும் அல்லது விசேஷக் காற்றடித்தாலும் வருஷாகாலத்தில் நல்ல மழையுண்டு.

மாகமாச பௌர்ணமியை நான்கு பாகமாக்கி முதற் பாகத்தில் வருஷதாதுக்கள் தோன்றுவிட்டால் ஆஷாட மாதத்தில் மழையில்லையென்றும், இரண்டாம் பாகத்திற் றேன்றுவிட்டால் சிராவண மாதத்திற் சுபிக்ஷமுண்டென்றும், மூன்றும் பாகத்திற் றேன்றுவிட்டால் பாத்ரபத மாதத்திற் பயிர்கள் வெட்டுக்கிளிகளாற் சேதமடையுமெனவும், நாலாம் பாகத்திற் றேன்றுவிட்டாற் கிளிகளாற் பயிர்கள் நாசமடையுமெனவுமறிக.

சுக்கிரன் குரு குஜன் இம்மூவரும் ஓரிராசியிலிருந்தால் துர்ப்பிக்ஷயோகமென்ப. அப்போது மழையின்றிக் கடலும் வற்றும்.

விருச்சிகம் இடபம் சிம்மம் மீனம் தநுசு இந்த இராசிகளிற் குஜனாவது சனியாவது வக்கிரகர்களாயிருப்பின், துர்ப்பிக்ஷ முண்டு.

இடபம் கும்பம் தநுசு இவற்றின் மத்திய திரேகாணத்திற் சனி சஞ்சரிக்கும் காலத்தில் துர்ப்பிக்ஷமுண்டாகி மனிதர் முதலாயினோர் மரணமடைவர்.

சுக்கிரனுஞ் சந்திரனும் ஒருராசியிலாவது ஒருஅம்சத்திலாவது இருந்தால் அரசர்களுக்குட் கலகமாவது விசேஷமழையாவது உண்டு.

சுக்கிரனுக்குப்பின் குஜனும் சனியுஞ்சென்றாற் பூமிநடுங்க மழை பொழியும்.

சுக்கிரனுக்கு ஏழிற்சந்திரனிருந்தாலும் அல்லது சுக்கிரனுக்கு 4, 7, 11-ற் சனியிருந்தாலும் மழையுண்டு.

சுக்கிரனுக்கு முன் புதன் நடந்தால் மேகம் கெடும்; மழைபெய்யாது.

சுக்கிரன் வக்கிரமாயிருந்து புதன் நேராக நடந்தால் நல்லமழை பெய்து வயல்களிற் சமுத்திரம் போல் நீர்வளம் பெருகும்.

சுக்கிரன் புதன் இவர்களிலொருவர் வக்கிரமாயும் மற்றொருவர் வக்கிரமில்லாமலு மிருந்தால் நன்மழை பொழிந்து தடாகங்களிலும் வயல்களிலும் ஜலம் நிரம்பியிருக்கும்.

புதனுஞ் சுக்கிரனுஞ் சமீபமாயிருந்தாலும் தீயவர் இருக்குமிடத்தில் மழையில்லை. (நல்லோரிருக்குமிடத்தில் மழை பெய்யும்.)

(தொடரும்)

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை,

தரங்கம்பாடி.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
NOV 1975

உ

சிவமயம்.

பாட்டியல்

இயற்றமி ழிலக்கண மைந்தனுள் ஒன்ருகிய யாப்பிலக்கணத் துக்கு அங்கம்போன்றதும் பஞ்ச விலக்கணங்களைப் பூர்த்திசெய்யத் தோன்றிய ஒழிபியல்போன்றதும் ஆயது பாட்டியலென்பது. இதனை முற்காலத்துப் புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் பொன் போற் போற்றிவளர்த்தார்கள்; இக்காலத்தார் பலர் போற்ருது கைவிட்டிருக்கின்றனர். முற்காலத்துப் புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் பாட்டியலைப் பொன்போற் போற்றினரென்றமைக்கு அவர்களியற்றிய பன்னிரு பாட்டியல் இலக்கணவிளக்கப் பாட்டியல் முதலியவை சான்றுகளாம். இக்காலத்தார்பலர் பாட்டியலைப் போற் ருது கைவிட்டிருக்கின்றனரென்றற்கு இவர்களியற்றும் சிறப்புப் பாயிரம் முதலியவை சான்றுகளாம். பாட்டியலைப் போற்ருது கை விடுதல் ஆராய்ச்சியின்மையாலோ அன்றிப் "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினுனே" எனுஞ் சூத்திரங் கருதியோ யாதோ அறியேன். ஆராய்ச்சியின்மையாலெனின், அறி வின்மை வெளிப்படும்; "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழு வலகாலவகையினுனே" எனுஞ் சூத்திரங் கருதியெனின் அது நியாய மின்று. அச்சூத்திரம், எண்ணியபடி இலக்கணங்கள் தள்ளலும் கொள்ளலும் குறிக்க எழுந்ததன்று. கால மாறுபாட்டிற் பழையவும் புதியவுமாகிய இலக்கணங்கள் சில முறையே கழிதலும் புகுதலும் தெரிக்க எழுந்தது. பழையன கழிதலுக்குப் பழைய இலக்கணங் களிற் சிறிதும் பயன்படாச் சிலவும் புதியனபுகுதலுக்குப் புதிய இலக்கணங்களிற் பெரிதும் பயன்படும் சிலவும் உரியளனப் பொருள் கொள்க. ஆகவே இக்காலத்துக்குச் சிறிதும் பயன்படாப் பழைய விலக்கணங்களிற் சில விடலும் இன்றியமையாதனவாய்ப் பயன்படும் புதிய இலக்கணங்களிற் சில தழுவலும் சிறப்புடையனவென்க.

இவுற்றானன்றே ஆசிரியர் பவணந்தியார் தொல்காப்பியத்துக்கு முரணுயிருக்கவும் "அ ஆ உ ஊ ஓ ஒள யம் முதல்" முதலிய சூத்திரம் செய்தருளினர். இவை இங்ஙனமிருக்க, பாட்டியல் கூறும் விஷயங்கள் மங்கலப்பொருத்தம் சொற்பொருத்தம் பாற்பொருத்தம் வருணப்பொருத்தம் உண்டிப்பொருத்தம் தானப்பொருத்தம் அக்கரப்பொருத்தம் நாட்பொருத்தம் கதிப்பொருத்தம் கணப்பொருத்தம் ஆகிய பத்தின் இலக்கணமும், அவை பொருந்தும் அகலக்கவியினிலக்கணமும் பிற இலக்கணங்களுமாம். பொருத்தங்கள் ஒவ்வொன்றும் உட்பிரிவுகளுடையன. அவற்றுள், சில நன்மைபயப்பன; சில தீமை பயப்பன. பொருத்த விலக்கணங்களே முக்கியமானவை. மற்றை இலக்கணங்கள் அவைபற்றிவந்தவை. இவ்விஷயம் பாட்டியல் ஆராய்ந்தார்க்கு வெளிப்படையாம். ஈண்டுப் பொருத்தமாவது அகலக்கவிக்கும் அகலக்கவிநாயகனுக்கும் பொருந்தும் பொருத்தமாம். இதனை,

"விரித்தபாமகட்கும்வேட்குமிறைக்கும்
பொருத்தமீரைந்துபோற்றல்வேண்டும்"

எனவருஞ் சூத்திரத்தானறிக. பொருத்தங்கள் பத்தும் அகலக்கவியின் முதற்சீரில் அமைவனஆம். இதனை,

"மங்கலஞ்சொற்பால்வருணமுண்டி-
தானமக்கரநாட்பாக்கதிகண
மானவீரைந்துமம்முதற்சீர்க்குப்
பொருத்தமென்னத்தெரித்தனர்புலவர்"

என்பதாலறியலாம். நற்பொருத்தமும் தீயபொருத்தமும் முறையே நன்மை தீமைகளை விளைவிக்கத்தக்கனவென்பது இலக்கணவிளக்கப் பாட்டியலிற் கணப்பொருத்தங்கூறும் சூத்திரவுரையின்கீழ்,

"நீரதுகணமேசீர்சிறப்பெய்தும்
தீயதுகணமேநோயதுசேரும்
அந்தரகணமேவாணாளகற்று
மிந்திரகணமேபெருக்கஞ்செய்யுஞ்

சந்திரகணமேவாழ்நாள்தருஉஞ்
சூரியகணமேவீரியம்போக்கு
மாருதகணமேசீர்சிறப்பகற்று
நிலக்கணந்தானேமலர்த்திருவிளங்கும்"

என்றார் மாமூல ரென்றதனானும்

"ஓதிய என்ற மிகையானே கணநாட் பொருத்தமுங் கொள்க."
அவையாமாறு;

"வருணகணமேசதயமென்ப
சந்திரகணமேமிருகசீரிடம்
அந்தரகணமேபுனர்பூசமாகும்
வாயுகணமேசோதியாகும்
சூரியகணமேபூசமென்ப
தீக்கணந்தானேகார்த்திகையென்ப
யமானகணமேபரணியென்ப
பூமிகணமேகேட்டையாகும்" எனக் கணநாட்கூறி
"நிலையேசெல்வஞ்சூலைநலநீக்கல்
கொலைபிணிநன்மையின்பங்கூறே"

என இந்திரகாளியார் பலமுங் கூறியவாறு அறிந்துகொள்க என்றதனானும் மற்றை நற்பொருத்தம் தீயபொருத்தங்கட்கு ஆராய்ச்சியானுமறிக. மற்றை யிலக்கணங்களும் கொள்ளத்தக்கனவெனவும் அறியத்தக்கனவெனவும் ஆராயின், விளங்கும். பத்து நற்பொருத்தங்களும் அகலக்கவிக்கு வேண்டுவன. இதனை,

"கூறியஇலக்கணங்குறைபாடின்றித்
தேறியமூவசைச்சீர்முதலாக
அகலக்கவிதானமையுமென்ப."

எனுஞ் சூத்திரத்தான் உணர்க. இங்ஙனம் பாட்டியல் கூறுவதானே அகலக்கவி பாடுவோர் பாட்டியல் கற்றல் கடமையாகின்றது. அகலக்

கவிபாடுவோர் அகலக்கவி பாடுவதெதற்கு? அகலக்கவி நாயகனுக்கு நன்மைக்கா? தீமைக்கா? நன்மைக்காயின், இக்காலத்துக்கு மேலே கூறியபடி பயன் பயனில் இலக்கணங்களுட் பாட்டியல் பயனுள இலக்கணமாதல் தெரிக. இதனாற் பாட்டியல் தழுவத்தக்கதென்று சித்தித்தது. இதுநிற்க,

இடைச்சங்க காலந்தொட்டு நிலைபெற்றுத் தன்னொளி குன்றாதிருக்கின்ற அரிய பெரிய தொல்காப்பியத்தின்கண் பாட்டியலில்லையே பாட்டியல் யாங்ஙனம் சிறக்குமென்பாருமுளர். அவருரை வெற்றுரையேயா மென்க.

எங்ஙனமெனில் விளம்புவல். தொல்காப்பியம் அகத்தியத்தின் வழிநூலாம். அகத்தியமோ சிதைந்துகிடந்த பழைய விலக்கணங்களை ஒருவழிப்படுத்திக் கூறியதோர் நூல். இவையிரண்டும் தமிழ் தோன்றியஞான்று உடன்தோன்றியவை அல்ல. ஆகவே தொல்காப்பியத்தின்கண் பாட்டியல் இல்லாமைபற்றிப் பாட்டியலுக்குச் சிறுமை வந்திடாது. பஞ்ச விலக்கணங்களும் தமிழ் தோன்றிய காலத்து உடன் தோன்றியனவென்பது ஒருதலை. அக்காலத்தே மேனுரைத்தபடி பஞ்ச விலக்கணங்களையும் பூர்த்திசெய்யவந்த ஒழிபியல்போலப் பாட்டியலும் தோன்றிற்று. இஃ துண்மையெனல் ஆசிரியர் அகத்தியனார் பாட்டியல் செய்தமையானே இனிது விளங்கும். ஆசிரியர் அகத்தியனார் பாட்டியல் செய்தது பன்னிரு பாட்டியலில் தானப்பொருத்தங் கூறும் அகத்தியர் பாட்டியற் சூத்திரங்களான் அறிக. அச் சூத்திரங்கள் அடியில் வருவன கண்டுகொள்க.

1. "குறிலைந்துடனெடில்கூட்டிநின்ற
ஐஔவிரண்டும்இஉவடக்கிப்
பாலகுமாரவரசுமூப்பு
மரணமென்றைவகைத்தானம்வகுத்தனர்."

2. "முன்பிற்செய்யுண்முதலெழுத்தற்குப்
பொருத்தமும்விருத்தமும்பகையுங்கொளலே."

கடைச்சங்கப் புலவர்களும் ஆசிரியர் அகத்தியனுர்போலவே தங்கள்காலத்து வழங்கிய பாட்டியலேக்கொண்டு பாட்டியல்பலசெய்து நிலவவைத்தார்கள். இது பன்னிருபாட்டியல் நவநீதப்பாட்டியல் இலக்கணவிளக்கப்பாட்டியல் முதலியவை ஆராய்ந்தார்க்கு உண்மையாம். மேற்கண்ட பாட்டியல் பல வேற்றரசர்களால் அக்கினிக்கு இரையாக்கப்பட்டன. இரையாக்கப்பட்டாலென்? தப்பியவை சில. அவற்றைக்கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் பலர் பாட்டியல் பல வியற்றியுள்ளார். அவை இக்காலத்து வழங்கிவருகின்றன. நவமாய்ப் பாட்டியல் தோன்றியதன்று. ஈண்டு அவருரை வெற்றுரையாய் முடிந்தது காண்க.

இங்ஙனம்,

அ. முத்தையமுதலி,
உபாத்தியாயன்,
கவர்ன்மெண்டு பாடசாலே,
பரங்கிப்பேட்டை.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY NOV 1905 MADRAS

உ

ஐயவினுத்தொடர்.

["தெரியுங்கா, லின்மை யரிதே வெளிறு" என்ற தேவர்வாக்கு எவர்க்கும் உடன் பாடாதலின், அது பற்றி யிச்சின்மொழி வரையலாயினன்.]

யாப்பருங்கலக்காரிகை.

1. உறுப்பியலில் "எழுவா யெழுத் தொன்றின் மோனை யிறுதி யியைபு," "இருசீர்மிசை யிணையாகும்" என்ற இரண்டு காரிகைகளினுல் முறையே தொடையுந் தொடைவிகற்பமுங் கூறினர் ஆசிரியர். அமுதசாகரனுர்.

இவற்றில் தொடைவிகற்பத்திற் கிலக்கியமாகவருவது "மோனை விகற்பம்" என்ற முதனிலைப்புக் காரிகையாம்; இதன்படி இயைபுத் தொடை விகற்பத்திற்கு இலக்கியம் "மொய்த்துடன் றவழும்" என்றது முதற் சிலவடிகளையுடைய ஒரு நேரிசையாசிரியப்பா வாகும்; அதன்படி "மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே" என்ற அடியின் 3 4 சீர்களினீற்றிற் கண்ட "லே" என்ற எழுத்துக்கள் இணையியைபு" க் கிலக்கியம்;

நிற்க ; ஒழிபியலுள் " அருகிக்கலி " என்ற காரிகையின் உரையில் உரையாசிரியர் "இரணத்தொடைக்கும்" என்ற உம்மையால் ஒழிந்த மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னுந் தொடை நான்கிற்கும் இவ்வாறே யொட்டிக்கொள்க; அவை கூடி வழங்கு மாறு:— என்று, "கடையே கடையிணை, பின்கடைக், கூழை யிடைப்புணர்வு" என்றவற்றை முறையே முற்கூறிய நான்கின் பாலுஞ் சார்த்தி "இவற்றிற் கிலக்கியம் "யாப்பருங்கலவிருத்தியுட் கண்டு கொள்க" என்றனர்.

[அவ்விருத்தி யச்சுவாகனம், ஏறி வராககுறையால், எம்மனோர் பலருங் கண்டுகளிக்க, இடமின்றியும்; ஏனையகொண்டும் ஐயம் வாளா வளர்வ தாயிற்று.]

அவ் விருத்தியில், கடையிணையியைபு; பின்னியைபு முதலிய வற்றிற் குதாரணம் வருமாறெங்ஙனம்? அவை யெவை?

"இறுதியியைபு" என்றமையான் விகற்ப இலக்கியம் காட்டுகை யில், மோனை, யெதுகைகளுக்குக் குறிப்பிட்டிருக்கிறபடி, முதற்சீரி னன்றோ, இறுதியில் வரவேண்டும்? அங்ஙனமாயின் "கடையிணை யியைபு"க்கு ஈற்றிலிருந்து இலக்கியம் காட்டிவரவியலும்; ஆனதால், மொய்த்துடன் றவழும் முகலே, பொழிலே என்பது "இணை யியைபு"க்குப் பொருந்துமா? "கடையிணையியைபு" என்றலாகாதோ? வில்லே நுதலே வேற்கண்கயலாம் என்பது "இணையியைபு" க்கு இலக்கிய மன்றோ? மறுக்கின் ஏன்? காரணம் விளக்கவேண்டுவல். இவ்வொன்றைக் கொண்டுதான் "இயைபுத்தொடைவிகற்பம்" முற்றி லும் இலக்கியம் காணவேண்டியதிருக்கிறது.

குறள் 54-ம் அதிகாரம்

பொச்சாவாமை.

2. "பொச்சாப்புக்கொல்லும்" என்றபாட்டிற்கு "புகழைப் பொச்சாப்புக் கொல்லும்-ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்" என்று உரையாசிரியர் பரிமேலழகியார் கூறினர். இதில் "பொச்சாப்பு" என்றதற்கு "மறவி" என்பதே பொருளாகக்கொண்டனர்; இங்ஙனமே 'பொச்சாப்பு' என்று வருமிடங்களில் (குறள் 199, 246, 534) "மறவி" யென்றே உரை யெழுதிச் செல்கின்றனர்; இதனுல் "பொச்சாப்பும், மறவியும், ஒன்றென்றே உரை ஆசிரியர் நினைத்தனர்போ போலும்; அற்ருயின், நன்னூல், உரியியல் "அறிவருளாசை" என்னுஞ் சூத்திரத்தில் "போச்சாப் பூக்க மற மத மறவியினைய" என்று உயிர்க்குணத்தில் பொச்சாப்பும், மறவி யும் வேருய் வகுத்துணர்த்துவர் ஆசிரியர் பவணந்தியார்; இரண்டும் வேறென்று கூறியவர் கருத்துடன், ஒன்றென்றே பொருள்கொண்டவர் கருத்துப் பொருந்துமா? வழக்கத்தில் முன்னவரே சான்ருகின்றனர்; இவற்றின் காரணம் வேண்டுவன்.

தொடரும்

நச்சுவார்க்கினியன்.

தச்சநல்லூர்.

ஸ்ரீ:

பாண்டிய சாசநம்

---:o:---

VII.

கோமார-பனமரான ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர் காலம்.

சீர்மெய்க்கீர்த்தி (அகவல்.)

(29) பூமலாததிருவுமபொருசெயமடநதையுந
தாமரைககுவிமுலைசசெயபபுயததிருபப
வேதநாவிலவெளளிதடடாமரை
(30) காதனமாதுகவினபெறதிளைபப
வெணடிரையுடுததமணடிணிகிடககைத
திருநிலமடநதையுரிமையிறகளிபபச
சமையமுநீதியுமத (31) ருமமுமதழைபப
விமையவாவிளமகொடி இடநதொறுமெடுபபக
கருஙகலிகனலகெடககடவே (ள) வேதிய
ரருநதொழிலவேழவிச (32) செஙகனலவளாபபச
சுருதியுநதமிழுந தொலவளஙகுலவப
பொருதிறலாழிபூதலஞசூழவர
ஒருகைஇருசெ (வி) முமதநாறகோட
டயிராப (த) மு (33) தலசெயிரதீரகொறறத
தெணடிசையானைஎருததமேறிக
கணடநாடெமதெனகயலகளிகூர
கோசலநதுளுவஙகுகிரஙகுசசரம
போசல (34) மகதமபொபபளமபுணடரம
கலிஙகமஈழஙகடாரஙகெவுடந

தெலிஙகஞசோனகஞசீனமுதலா
விதிமுறைதிகழ (வெவ) வேறுவகுதத
மு (35) துநிலககிழமையினமுடிபுனைவேநதற
கொருதனிநாயகனெனறுலகேதத
திருமுடிசூடிசெஙகோலோசசிக
கொறறததாளகளிகளு (36) டைநீழற
கறறைககவரிகாவலாவீச
விடைகதிாநவமணிவீரஸிஙஹாஸநத
துன(?)முடிசூடியு(?)யாகுலததிருவென
மஙகயாமலாகாங (37) குவிததுபபாாததிபா
மஙகையாதிரணடுவணஙகுஞசெனனிச
சுடரொளிமவுலிசசுமாமணிமிசை...ட
சிவநதவிணை மலறசீறடிக
மதுகரஙகமலமெனறணுகு (?) (38)

(உரை)

முலகமுழுதுடையாரொடுவீறறிருநதருளிய
மாமுதலமதிககுலமவிளககியகோமுதல.

கோமார-பனமாான ஸ்ரீபுவன சகரவததிகள சீசுனத (39)ரபாணடிய தேவறகுபதிநாளநானூறறுபபதினைஞசினலமாடகளகீழமதுரைக கோயிற பளளியறைககூடதது பளளிபபீ (40) டமழவாராயனில எழுநதருளி இருநதுதிருவழுதி வளநாடடுததிருககுரு கூா பொலி ஞசு நினறருளின பரமஸவாமிகள கோயிற திருபபதி சீவைஷணவா செயயதிருவாய மொ (41) ழிநதருளினபடி இபபரமஸவாமிகளுககு வடதலைசசெமபிநாடடு கீழைககோடுமளூரான மதுரோதயநலலூா அரையன திருநா (42) டுடையானன நீலகங்கரையா பேரால அரை யன பூவனன வேணுவுடையாககணட திருநாடுடையான சநதிககும இவவேணுவுடை (43) யார்பிறநத உததராடடாதி நாள ஸ்ரீயமம

ப்ரஸாதிபபதாகக கணட சிததிரைததிருநாள பதினஞசுககும திருப படி மாறறுளளிடடு வேணடு (44) நிமநதஙகளுககும திருநாடபடிக கும இநநாட்டுச சிவைகுநதமான இராஜேநதிரசசதுரவேதிமஙக லத்துக கீழபடாகையில (ஏழுக) கை (45) க கோளாஜீவிதமாயபபோ நத காவாலிககு கிழெலலை இவிராஜேநதிர ஸூ-வெ-ஷி மஙகலதது ஸபெஹயார பறறுன கீழைககாவாலிககும சிஙக (46) ன குறிச்சி பறறுககும பெருஙகுளமான உததமபாணடிய நலலூரகது நீரபாயகிற பெருஙகாலுககு மேறகும தெனனெலலை திருத்துலை விலலிமஙகலதது அரவிநதலோசன்ன தேவதானததுககும இவிராஜேநதிர ஸூ-வெ-ஷி மஙகலதது ஸபெஹ யாரபறறுன புளியறை பறறுககும பூணைககுடிய (48) ானபறறுககு வடககும மேலெலலை திருககுருகூர ப்ரஹ் விஜானகள மடபுறமான புதுவூரககரைககும இவிராஜேநதிர ஸூ-வெ-திமங (49) கலதது ஸபெஹயார பறறுககு கிழககும வட வெலலை இவிராஜேநதிர ஸூ-வெ-தி மஙகலதது நினறும பெருங குளமான உததமபாண,

நடுப்பத்தி.

(1) டியநலலூருககுப போகிற பெருவழிககுத தெறகும ஆக நானகெலலைககுடபடட (2) நிலம முனனுடையாரும ஜீவிதமும முதலுந தவிறது காராணமை மியாடசியும கடமையும அ (3) நத ராயமும விநியோகமும தருவதான அசசும காரிய வாராடசியும வெட்டிபாடடமும பஞசுபீலிசநது (4) விககிரகபபேறும பொனவரியு மறறு மெபபொபபடடினவும உடபட பதினெணருவதி னெதிரா (5) மாணடுமுதல தேவதான இறையிலியாக இடபபெறவேணுமெனறு ஐயனமழவரரயன நமககுச சொனனமையில இபபொலிஞசு (6) நின றருளின பரமஸவாமிகளுககு இநநீலகஙகரையாபேரால இவவேணு வுடை (7) யாரகணட திருநாடுடையான சநதிககும இவவேணுவுடை யார பிறநத உததராடடாதிநாள தீரததம பிர (8) ஸாதிபபதாககணட சிததிரைததிருநாள பதினஞசுககும திருபபடிமாறறுளளிடடு வே ணடு நிப(9) நதஙகளுககும திருநாளபடிககும இவவிராஜேநதிர ஸூ-

வேதி மஙகலததது கிழபிடாகையில எழூா கைக (10) கோளா ஜீவித மாயப போநத காவாலிககு க கீழெலலை இவிராஜேநதிர சதுர்வேதி மஙகலததது ஸபையா (11) ாபறறுன கிழைககாவாலிககும சஙகன குறிசசிபபறறுககும பெருஙகுளமான உததமபாணடிய நல (12) லூரு ககு நீரபாயகிற பெருஙகாலுககு மேறகும தேனனெலலை திருததுலை விலலிமஙகலததது அரவிநதலோ (13) சனன தேவதானததுககும இவிராஜேநதிர சதுர்வேதி மஙகலததது ஸபையாாபறறுன புளி யறை (14) பறறுககும பூனைககுடியான பறறுககும வடககும மேலெலலை (15) திருககுருகூா ப்ருஹவிஷ்யானகள மடப்புறமான புதுஹூாககரைககும (16) இவிராஜேநதிர சதுர்வேதி மங்கலத்து ஸபையாா பறறுககும கிழக்கும (17) வடவெல்லை இவிராஜேந்திர சதுர்வேதி மஙகலததது நினறும பெருங (18) குளமான உததம பாணடிய நலலூாககுபபோகிற பெருவழிககுத தெறகும ஆக (19) நானெகலலைககுடபடட நிலம முனனுடையாரும ஜீவிதமும முத (20) லுநதவிாதது காராழமைமியாடசியும கடமை அநதாாயமும வினியோகமுந (21) தருவதான அசசும காரியவாராடசியும வெட்டி பாடடமும பஞசுபீலி சநது(22) விககிரகபபேறும பொனவரியுமறறு மெபபோபபடடினவும இவவாண்டுமுதல தேவதான இறையிலியாக இடடுவரியிலகக எழுததிடட வளவரி (24) யும நம ஓலையும தரசசோன ஞேம கைககோணடு இபபடி சநதிராதிததவரை செல (25) வதாகக கலலிலும செமபிலும வெட்டி விததுககொளகவெனறு திருவாய மொழிநதருளினா. இவைதிருமல்லி நாடடுததடஙகணணி சிறறா உடையாா......நினறுவொன வீரசோழதேவனனை குருகுலததரை யன எழுதது.

A M சடகோபாாமாநுஜாசார்யுன்,

திருச்சிராப்பள்ளி நாஷநல் ஹைஸ்கூல்.

புத்தக வரவு.

—(:o:)—

(1) இல்வாழ்க்கை முறைமை என்னும் கிருகபரிபாலனம்:— இது ரசாயனநூலாசிரியராகிய ஸ்ரீமத்-தா. பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்களா லெழுதப்பட்டது. இதில் இல்வாழ்க்கை இனிது நடைபெறுவதற்கு முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகளும், ஆரோக்கிய சாதனங்களும் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆண் மக்கள் பெண்மக்கள் எல்லாரும் எளிதினுணரும்படி செவ்விதா யெழுதப்பட்டிருக்கின்றன. இவ்வா றெழுதப்படும் சிறிய புத்தகங்கள் தற்காலத்திற் பெரிதும் பயன்படத்தக்கன. இதன்விலை அணா 12.

---

(2) திருமணவாழ்த்தும், நீதிநெறித் தாலாட்டும்:— இவை பண்டிதர் ஸ்ரீமத்-மு. பொ. ஈசுவரமூர்த்தியாபிள்ளை அவர்களாலியற்றப்பெற்றன. இவற்றுள், நீதிநெறித் தாலாட்டு, திருக்குறளின் அதிகாரந்தோறும் ஒவ்வொருகுறளின் கருத்தைத்தழுவி 133-தாலாட்டுக் கண்ணிகளாகப் பாடப்பட்டிருக்கிறது. மற்றது மணமனையிற் பாடுதற்குரிய பாடல்களுள்ளது. இவ்விரண்டும் சேர்ந்தடங்கிய புத்தகத்தின்விலை அணா $1\frac{1}{2}$.

☞ மேற்கண்ட புத்தகங்கள் 2-ம் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப்படி சேர்க்கப்பட்டன.